
கண்டுணர்வது!



# கண்டுணர்வது!

**வெளியீடு :**
**அன்பின் குடில்,**
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
**கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,**
**அந்தியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,**
தமிழ்நாடு - 638 311
**தொலைபேசி : (04256) 227655**
**மின் அஞ்சல் : anbinkudil@yahoo.co.in**

**முதற்பதிப்பு : திவ்ய நாம யாத்திரை, 2013**
**பிரதிகள் : 250**
**அட்டைப்படம் : மூணாறு தேயிலைத் தோட்டம்**

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025



ஸத்திய வாக்கு 1

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.
"ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்!"

# ஸத்குருதிருவடிதனை நம்பினோர் கெடுவதில்லை!

# தெய்வம் மனுஷ்யாணாம் யத் பாவம் தத் பவதி!

## ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம்.

ஓம்

அகம் பிரம்மம் ஜெகம் பிரம்மம் அகமே எல்லாம்

ஜெகம் பாரும் ஜீவர்களும் சிறிதும் இல்லை.



ஸத்திய வாக்கை

ஸத்தியம் பேசு. ௨

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைவரும்!"

# நாம் யார்?

கருத்து.

ஸ்ரீபகவானின் குழந்தையே.

பரமாத்மாவின் தம்பியே.

அகண்ட பரப்பிரம்மமே.

அகண்டானந்தமே யாம்.

சகஜானந்தமே ,, .

அகண்டப் பேரொளியே ,, .


ஸிதாஹாய சொருபமே ,,

ஸித்பர ,, ,, .

ஸின்மய ,, ,, .

ஸத் ஸித் ஆனந்தமே ,, .

# கண்டுணர்வது



௩

நாம் என்றால் இருமை.
யாம் என்றால் ஓர்மை. ஜீவன் நானை விடுகிறான். ஈசன் நாமை விடுகிறான் என உணர்க.


நாம் என்பது இங்கு பன்மையல்ல.
,, ,, ,, இருமையே.

இருமை என்ற நிலையில், ஸ்ரீபகவானையும் எம்மையும் சேர்த்து இரண்டாக்குகிறோம்.

காரணம்:— ஜீவன் மனதினால் இயங்குகிறான். ஆனால் ஸ்ரீபகவானோ மாயாவினால் இயங்குகிறான்.


ஜீவன்! நான் என்பதை! விட்ட நிலையிலும்;
ஸ்ரீபகவானானவன் நாம் என்பதை ,, ,, ;
யாம் என ஆன நிலையிலும், இருவரும் ஒன்று.

பாபா.



ஓர் ஸ்ரீமஹாத்மாவின் கேள்வியாவது:-

ஸ்ரீமஹாத்மா:- அன்பான, அறிவான, பணிவான, பண்பான பாபாஜீ! நிதாகனின் ஸ்வய அனுபவ வைராக்கியம் சற்றுத் தெளிவாக விளக்கி அருள வேண்டும் பாபா? பலமுறை தாங்கள் விளக்கம் பலவிதமாக கொடுத்தாலும்; எமக்கு பூரணமான வைராக்கியம் ஏற்படவில்லை. அனுபவத்தினால் வைராக்கியம் ஏற்படுமா? வைராக்கியத்தால் அனுபவம் ஏற்படுமா? இக்கேள்விக்கு தாங்கள் பாடல்களுடன்! அனுபவ வைராக்கியம் தந்தருள வேண்டும் பாபாஜீ.



5

அதுவேயாம்!
என்பதில் வாய்
ஞானம் இல்லா
மல் அனுபவஞானம் வேண்டும்.
அப்படி அனுபவஞானம் ஸ்திர
மானால் தான் பரிபூரண
வைராக்கியம் **யாமே அது**
என்ற **உறுதி** திடம் வரும்.

வைத்தியம்:- உங்கள் பரிபூரண நம்பிக்கையால் தான்
ஸ்வய அனுபவம் உண்டாகும். உங்கள் ஸ்வய
அனுபவத்தால் பரிபூரண வைராக்கியம் உண்டாகும்.
உங்கள் பரிபூரண வைராக்கியத்தால் நீங்கள்
ஜீவன் முக்தனாகவே பிரகாசிப்பீர்கள் மஹாத்மா.

(A) அது உண்டு என்பதில் நம்பிக்கை.

(B) அதுவேயாம் ,, ஸ்வய அனுபவம்.

(C) யாமே அது ,, பூரண வைராக்கியம்.

இப்படி ஸ்வய அனுபவம் பெறுவதற்கு




6

கலியுகத்தின் கடைசிக் காலமாக இருப்பதால்; பழக்க வழக்கம் தவிர்க்க முடியாமல் இருப்பதால் செயற்கையின் வாஸனா நாசமாவதற்கு தொடர்ந்த அப்யாசம் பாராயணம் செய்யவேண்டும்.

தேவதாரைபோல் தொடர்ந்த அப்யாசம் வேண்டும்.

இதையே நித்திய பாராயணம் என ஆதிஞானிகள் சொல்வர்.


காரணம்:- இது கலியுக கடைசி காலமாக வேகத்தால் அழிவின் பகுதியாக இருப்பதால் மன இருள் மன அழுக்கு மனதின் தோஷ குணங்கள் நீங்க நித்திய பாராயணமாகிய அகம்பிரம்ம பாவனை முமூட்சு எல்லாம் சாதகர்கள் அனைவரும் அவசியம் செய்ய வேண்டும்.




அப்படியானால் தான் நம்பிக்கையின் அனுபவமும்
வைராக்கிய திட உறுதியும் சாத்தியமாகுமென
ஆதி பரிமளரான்களின் வாக்கால் அறிகிறோம்.
இனி பாடல்களையும் விளக்கத்தையும் காண்க.

பாடல் 132.

குருதேவா!
அகில வித வுபாதியுமில் விதேகமுக்தி,
அடையுமளவு, அஞ்ஞான வேசத்தாலே,
வெகுவிதமாம் பிராரப்தம் நோயுமட்டும்,
விதவிதமாம் துவைதத்தின் ஆபாசங்கள்,
நிகழினும், நிச்சலமாம் ஜீவன்முக்தி,
நிலையிலுள்ள யாம், என்றும் சலித்திடாமல்,
இகழ்வறவே நேரிட்ட போகம் துய்த்திங்கு,
எம்மிடையாம் ஆனந்தமுடன் இசைந்து நிற்போம்.



பொருள் :— நாமரூப சம்பந்தஎந்த உபாதைகளும்

இல்லாத ; விதேக முக்தி அடையும் வரையிலும் ;

அதாவது இன்னொரு கருவறைக்கு தூலம் செல்லாத நிலை

பெறும் வரையிலும் ; (தூலம் விதி வசத்தால் மறையும் வரை)

அஞ்ஞானம் அல்லது அறியாமை அல்லது கவனக்குறைவு


மயக்கத்தினால், நிகழ்கின்ற நிகழ்வுகளின்

பிராரப்த கர்மாக்களின் (ஆசாபாசங்கள்)

எப்படி நடந்தாலும் ;

வினை முடிகிறதென்றும், மனதின் கர்ம காரியங்களை

கண்டுணர்வது



9

மாயா நடத்தி முடிக்கிறது என்றும், அவை

நாமும் அல்ல. நம்முடையதும் அல்ல என்றும்,

வினையின் பற்று வரவு முடிவடைகிறது ,,

விழி கண் குருடு போல் பார்த்துக் கொண்டிருப்போம்.

மன அசைவற்று, அறிவால் ஆனந்தமாய் நிலைத்திருப்போம்.

பிராரப்த போகங்களை மனோ ஆசை & அசைவு


அற்ற நிலையால், கருவி கரணங்கள் அனுபவிக்கின்றன

அவை நாமும் அல்ல. நம்முடையதும் அல்ல என்றும்,

யாம் ஜீவன் முக்தனே) என கருநிகழ்வில் போலும்;

பட்ட மரம் போலும் ஏதிலி யாம் ஆனந்தமாயிருப்போம்.

(இருக்கிறோம்) என முடிகிறன்.





பாடல் 133.

குருதேவா!

புகல் ஜீவன்முக்தர்க்கும் பிராரப்தத்தால்,
பூஷணமும் தூஷணமும் எங்கும் உண்டே.
அகமேவும் அகம் பிரம்ம நிச்சயத்தார்,
அவர் ஜீவன் முக்தரல்வால் மற்றோர் செய்யும்;
வெகுவான பூஷண தூஷணங்களாலே,
விமலமதாம் நிலை பெற்ற அன்னோர்க் கென்றும்;
இகழ்வான தேவையுமில்லை யெனும் உரத்தோடு;
எம்மிடையாம் ஆனந்தமுற இசைந்து நிற்போம்.


பொருள்:— பேரறிவால் உணரும் ஜீவன் முக்தனாகிய எமக்கும் பிராரப்த தாவம் உண்டு. வாக்கிய விளக்க நியமித்தும் உண்டு. உண்மையில் இல்லை. அப்படி தாவம் கவியிக்கப் படுவதால். அத்தாவ நியமித்துமாத, போற்றவும் தூற்றவும் இயல்பாக வந்தே தீரும்.





இது எவரால் ஏற்படும் என்றால் ஜீவன்முக்த
பரமார்த்திக நிலை பெறுபவர்கள் சிவமாக
(அவர்களுக்கு அறிவின்மையால், மனோவசம்
அகப்பட்ட தன்மையால்) எம்மாமதை தூஷணை
போற்றவும் தூற்றவும் செய்வார்கள். அது
அவர்களின் அறியாமையாகும். அதுவேயாம்.
யாமே அது. யா மே எல்லோரும் & எல்லாம் யாமே
என்ற அகம் பிரம்ம பாவனையில் கரைந்த மயமானயாமே
அவர்களும் & அவைகளும் யாமாக இருப்பதால்.

12



ம ல ம ற் ற யா ம்! பேரறிவான யாம்!

அவர்களும் எமக்கு அன்னியமாய் இல்லாமையால்

போற்றலும் தூற்றலும் ஓர் பொருளாகத் தெரியாது.

அவை எம்முடைய பிரணவ ஓசையென


பிரம்மானந்தமாய் ஏற்றுக் கொள்வோம்.

குறிப்பு:- மிருகங்கள் & பறவைகள்! இவைகளின்

கத்தல் எப்படி பொருட்படுத்தாமல் சாந்தியாக

அமைதியின் ஆனந்தமாக செல்கின்றனவோ!

அப்படிச் செல்லலாம். அப்படிச் செல்லவேண்டும்.




13

பாடல் 134.

குருதேவா! நின் கருணையினால் யாம் இப்போது,
மகிழ் ஜீவன் முக்திநிலை மருவா நின்றோம்.
வேதமுறும் பிராரப்தம் உள்ளமட்டும்,
பிசகறவே அகம் பிரம்ம நிச்சயத்தை,
சாதகமாய் சந்ததமும் சாதிப்போமாய்;
ஸங்கற்ப விகற்பங்களுக்கு இடம் கொடாமல்;
ஆதிமுடி(வு) ஒன்றுமில்லா அகண்டமான,
ஆன்மாவில் அனவரதம் அமர்ந்துநிற்போம்.

பொருள்:- குருதேவா! உம் அளப்பரிய கருணையினால் காலாதீதபரமே யாம்! யாமே காலாதீதபரம் என்ற, ஜீவன் முக்தராகவே இருக்கிறோம். (ஜீவன் முக்திநிலையை தழுவிக் கொண்டோம்)



ஆறவும்?

தூலக்கண்களுக்கு தெரியும்படியாய் இந்

தூலம் தோன்றுவதால் பிராரப்தம் வினை முடியும் வரை

இங்கு தால் சஞ்சாரம் செய்ய வேண்டும். அக்காலங் களில்

உணவு, உடை, இருப்பிடம், ஏற்றே ஆக வேண்டும்.


அஷ்ட திக்கு பாலகர்கள் மூவும் அவை நடந்தாலும்

(பாசமலர்)

சிவரை கடைத்தேற்றும் நிலைக்காக அன்பின்

மிகுதியால் அவரிடம் உணவு உடை ஏற்கும்

நிர்ப்பந்தம் ஏற்பட்டே தீரும். அவசியமாகிறது ஆகும்.





அது சமயம் அவர்கள் கர்மாவை தீர்த்தே ஆகவேண்டும்.

அது அறிந்தும் அறியாமலும் / தெரிந்தும் தெரியாமலும்

பற்றும் கர்மாவாகும் / எவ்வுணர்வால் உணர்ந்து

இவைகளை யாவரால் தடுக்க இயலாது? எனக் கேள்வி எழலாம்.


முடியாது. சத்பர கருணையின் நிழலில் நடைபெறுவதாகும்.

ஆகவே அந்தக் கர்மாவை நாசம் செய்வதற்காகவே

அகம் பிரம்ம பாவனை என்னும் அப்யாச பாராயணை

செய்தே ஆகவேண்டும். இங்ஙனம் இதன் காரணம்.

குற்ற தோஷத்தின் ஐகவாசத்தால் உண்டாகக்கூடாது.



16

இது

# சுகசமாதி / கூடும்வரை வேண்டும்.

அது கூடிவிட்டால் தானே நின்றுவிடும். அது ஸத்தியம்.

# அது சுகஜானந்தம் / அப்புறம் ஆகிவிடும் எனவுணர்க.

எம் குருதேவா! பாடல் 136.

ஆதலினால் எம் தந்தையும் நீ தாயும் நீயே.
அதிசயமாம் மற்றுமுள்ள பந்து நீயே.
சாதகமான எம் ஸத்குரு நீ சகாவும் நீயே.
சகலமும் நீயே! என வணங்கி ரத்தி;
சீதளமான மனதுடனே / பவதாபங்கள்
சிறிதும் இல்லா ஸின்மாத்ர நிஷ்டை கூடி;
ஆதிமுடிவு ஒன்றுமில்லாத அகண்டானந்த
ஆழியினில் அசஞ்சலமாய் அமர்ந்தோம் யாமே.



பவதாபங்கள் (17)
சிறுதுமிவ்வா
ஸின்மாத்ரநிஷ்டை:—
நன்மை தீமை என்னும்
புண்ணிய பாவங்களாகிய
சம்ஸார பவ சமுத்திரம் நீங்கிய பரநிலை என
உணர்க.

பொருள்:— ஆகவே எம்முடைய தந்தையும் தாயும் நீ என்றால்?
அதன் உட்பொருள் என்னவென்றால் ???
அறிவின் தந்தைக்கு அப்புறமே அன்பின் தாய் எனவருவதை கவனிக்கவும். அதாவது,
அறிவு இருந்தால் தான் அன்பை உணர முடியும்.
மனம் இருந்தால் நாமரூப பாசத்தைத்தான் காண முடியும்.
உணர்வது வேறு, காண்பது வேறு என உணர்க.
ஆகவே அறிவை தந்தையாகவும்; அன்பை தாயாகவும் சொன்னார்கள் ஸ்ரீமஹான்கள். ஆ ற ல்?
பாடவிளக்கத்தின் நிலையில்; அன்பை இறைவனாகவும்!
பாசத்தை நாமரூப ஜகமாகவும்! ஒழுக்க பாடம் உரைப்படவே
(ஆகவே அன்பே தந்தை எனவந்தது) ல்லவ.

18



அதிசயமுந்து நீயே :- வினைத்தொடர்பில்லாமல்

வரவு பற்று செய்யக்கூடியவர்கள் அதிசயமானவர்கள்.

வினைத்தொடர்புடன் பற்று வரவு செய்பவர்கள்

நாம ரூப சொந்த பந்துக்களாகும் என உணர்க.

எமக்கு சாதகமான / அதாவது எம் சாதனையின்

தூண்டுகோலான / அதாவது / உபகார கர்த்தாவான /

அதாவது எம் ஆப்த நண்பனானவன் / அதாவது

அஞ்ஞான சத்துருவாயும் / மெய்ஞான சத்குருவாயும் /



அசைவற்ற
அடிமண்டி
அசைவுற்ற
சமுத்திரத்தின்
அஸ்திவாரமாகும் என
அறிவால் உணர்க.

விளங்குபவர் நீயே (ஸத்குருவே)
சகலமும் (எல்லாமும்) நீயே!

இதை வாக்கால் சொல்லி; அறிவால் உணரும் யாம்
சீதளமான மனதுடன் அதாவது குளுமையான!
மென்மையான மலமற்ற மனதுடனே
அல்ல அல்ல
அறிவுமயமான
மேலும் அறிவும் பேரறிவான நிலையிலும்
பேரறிவு அகண்டானந்த சமுத்திரத்தில்,
அசைவற்ற அடிமண்டி போல்; யாம் யாமாய்!
யாமே நீ! நீயே யாமாய்! நிலையுற்றிருக்கிறேன் குருதேவா!
என வைராக்கியம் நிறைவு பெறுகிறது



உ

குறிப்பு:- இங்கு கிருபையின் சமுத்திரமாகிய

உம்மையும் காணோம்.

உம் பரம கிருபைக்கு பாத்திரமான;

எம்மையும் காணோம்.

நாம் இரண்டும் ஒன்றாக கலந்து; அச்சடிணத் தடவ்.

அந்த ஒன்றையும் காணோம்.

யாம் யாமாகவே இருக்கிறோம் என்றது மறுகூடிணம்;

இருக்கிறது ஏன் இருக்கிறது!!

தே திருபாபா.



ஓர் பைத்தியம் புலம்புகிறது.

மனதுடையோர் நம்ப மறுப்பர். ஏற்கார்.

அறிவுடையோர் உள் ஆழ்ந்து சிந்திப்பர்.

தம் சந்தேக கலக்கபயத்தை நாசம் செய்வர்.

அதனல் ஆனந்தம் அடைவர். அவ்வானந்

தத்தை அகண்டானந்தம் ஆக்க முயற்சி செய்வர்.

அம்முயற்சியால் வெற்றியும் பெறுவர்.

இது வைத்தியம்! இது வைத்தியம்!! இது வைத்தியம்!!!




அவர்கள் முயற்சியினால் அறிவு பேரறிவாகும்.

தனது மனமுயற்சி சர்வார்ப்பணம் ஆகும்.

தனது அறிவின் முயற்சி பிரம்மார்ப்பணம் ஆகும்.

# உண்மை!

ஸ்ரீமாலயா அன்பர்களில், ஓர் மெய்யன்பரின்

கேள்வி:— அன்பில் நிறைந்து, அறிவில் உணர்ந்து, எந்தநொடியும் அதுவாக இருக்கும் எம் அருமை பாபாஜீ! காலாதீத பரத்திற்கு

பரப்பிரம்மத்திற்கு இதுகாலபரியந்தம்!



விளக்கம் கொடுத்திடவே

இந்த ஓர் முறையான நல்

அது காண முடியாத ஒன்று என்றும்; அதற்கு

விளக்கம் கொடுத்தால் கறை படாத ஒன்றை!


வாத்தால் எச்சில் படாத ஒன்றை! | கறை |

படுத்தியது போலும்; எச்சில் | படுத்தியது போலும்.

என்றும்;


ஆகும் என்றும்; அது மறை | அபச்சாரம் ஆகும்.

எல்லோரும் அச்சமுற்றிருக்கும் போது,



தாங்கள் ஒருவர் மட்டும் அகண்ட ஏக ரசம்! அகண்ட ஐக்கிய ரசம் என்றும்; முறையே அகண்டபாவனை மணி என்றும்; அகண்டானந்த சமுத்திரம் என்றும்; விளக்கம் உவமானை உபமேயத்தோடு; கொடுத்தீர்கள்.

அதை ஒருவாறு அறிவின் கூர்மையால் நாங்கள் எல்லோரும் அறிந்துகொள்கிறோம். ஆனால்?



௨௬

அந்த காவரதீத பரப்பிரம்மமானது :-

(1) அனந்தகோடி சூர்யப் பிரகாசம் என்றும்;


(2) ஆனவ் நிலவ ஹான் குளுமை போன்றது ,, ;

(3) பாலின் வெண்மை ,, ,, ;

# அதைகாணக்கூடிய ஓர் வஸ்துவின்

நியியல்

நிராக்தம் கொடுப்பது ஒன்றுதான் நாங்கள் அனைவராலும் ஏந்த முடியவில்லை. இயலவில்லை.



26

அதை


கண்டவர் விண்டிலர் என்றும்,

"விண்டவர் கண்டிலர்"

ஆதிவேதமறைகளின் வேத்திய அனுபவ வாக்காக இருக்கிறது. ஆ ம யு ம்?

உங்கள் வரவைப்பற்றி சொன்னதுவேயெனும்

உங்கள் கரம் கொண்டு எழுதிய பலபல நூற்றுக்கணக்கான அனந்த



27

பெத்திய வாசகங்களை (மடல்களை) காணுமிடத்தும்;

எவரிடமுமே இதுகாவயரியந்தும் காணத


பொறுமை! அடக்கம்! பணிவு!

எளிமை& இனிமைகளின் பொருள் பொதிந்த

வாக்கு! இவைதிரளவைத்து

உற்றுணர்ந்து நோக்கும் இடத்திலும்.

தாங்கள் பலஇடத்திலும், பலமுறை சொல்வது;



28

ஸத்தியத்தை உரைப்பவனுக்கு பயம் தேவையில்லை பயம் வராது என்றும்;


ஆனால் பணிவு தேவையென்றும்;

சொல்வது மிக மிகப் பொருத்தமே! ஆகவே

உங்கள் வார்த்தை நாங்கள் அனைவரும் ஏற்கிறோம் நம்புகிறோம்.

ஆனாலும் முன்கூறிய மூன்றின் நிலையால்;

அமைந்த பிரம்ம ரகஸ்யத்தை மட்டும்!



29

எங்கள் அறிவுக்கு எட்டும் நிலையில்.

மனமும் இல்லை மனதின் தன்மையும் இல்லை

அதாவது நாம ரூப குணம் குறி இல்லா நிலையில்.


கொஞ்சம் கூட்டிக் காட்டினால் போதும்.

தொட்டுக் காட்ட முடியாது.


" இயலாது.

தாங்களுக்கு இவ்வனுபவானந்தம் சாத்தியமானதை

நிலையென்னையா பாபாஜீ என அவர் சிற்றுரையை முடித்துக்கொண்டார்.



வைத்தியம் :- அன்பும்! அறிவும்! ஆர்வமும்!
கொண்ட எம்பி மஹாத்மா! அவன் அருளால்
அவன் தாள் வணங்கி! என்ற நிலையில், தாங்கிற
அவனாகிய அதுவாக மெய் பாவனை செய்து
ஸ்ரீபாத நமஸ்காரம் செய்கிறேன்.
என சொல்லிய அன்னை பாத நமஸ்காரம் செய்து
எழுந்தது அவ்வைத்தியம்.
அம்மஹாத்மா உருகி நெகிழ்ந்து போன நிலையில்
ஆரம்பமே நெக்குருகிப் போனேன் பாவநா!
இப்படி பணிவறுக்கே!!!





எல்லாம் ஸாத்தியமாகும் என்பதை
உணர்ந்து கொண்டோம் பாபா!

பைத்தியம் ஓர் புதுமையானது.
பரமே! யோகமாயாவிதைவ்! பர

ஒலியினை ஒலிந்து!!!

ஓம் முமூட்சுக்களே! ஓர் உண்மையை
உணர வேண்டும். சாஸ்திரம் பக்குவ ஆன்மாவுக்கு.
வேதம் தெய்வத்திற்கு. வேதாந்தம் பரத்திற்கு.
என உணர வேண்டும்.



இவை மூன்றையும் பாடம் (படிப்பாக) படிக்காமல்

உணர்வால் உணர்ந்து கரைந்து மயமானவை

ஓர் ஸாது அதிவர்ணாஸ்ரமி ஆவான்

ஞானமுதலில் உணரவேண்டும்.


மேலும் தெய்வ பித்து ஸௌபாக்கியம்

பிடித்தவனே பித்தனும்! பேயனும்! விபரம்

அறியாசிசுவும் ஆவான். அவன் ஒருவனே!

தம் உபாஸனாமூர்த்தியை பித்தா/பேயா என

அழைக்குமடியும் அழைக்கிறேன். அழைக்க வேண்டும்.



33

இப்படி பித்தா! பேயா! என்றழைக்கும்

ஒருவன் தாமே பித்தனைகவும்! பேயனைகவும்!!

விபரம் அறியாசிசு போலும்! இருக்க வேண்டும்

1) பித்தன் :- வைத்தியம் செய்ய


வைத்தியம் பிடித்தவனைக இருக்க வேண்டும்.

இறைவனை பித்தன் என்சொல்வது அவன் பக்தன் மேல் பித்து

பிடித்தவனாக இருக்கிறான் என அறிக.

2) பேயன் :- நாமரூப ஜீவ சொந்த

பந்தம் அனைத்தும்.



34

கூலிப் பொடி என! அதாவது சுடுகாட்டு சாம்பல் என! அதாவது பரமாணுவாகிய பரமசூக்ம என ஸித்தியமாக உணர்ந்து, பேய்போல் திரிந்து, பிணம் போல் கிடந்து, பெண்ணைத் தாய் என எண்ணும் திறமை உள்ளவனே பேயன்! என அறிக.

3 விபரம் அறியா சிசு:— இரண்டு வயதுக்கு (ஒருவயதுக்குமேல்) உட்பட்ட சிசு நிலை எதுவோ அந்நிலை.

இப்படி மூன்று நிலைகளிலும் கிடக்காமல் சஞ்சரிக்கப்பட்டவன் எவனோ அவனே ஞானி என்பர்.





அவன் **ஒருவனே!** நாமரூப இறைவன்!

பித்தா! பேயா! என உபசாரவசனத்தால் வர்ணிக்கக்கூடியவனும்.

**அவனே!** உதவாக்கரை முன்பு வேறவிலும்;

இப்போதும் ஓர் பைத்தியம்போல் சஞ்சாரம் செய்கிறான்.

அவனே எந்தக்கட்டுகளும் இல்லாதவனையும்.

அந்த **ஒன்றில்** கட்டுண்டு **அரு**வாகவே

பிரகாசிப்பவனைகவும்; **ளி** நக்ஷத்திரம்!



36

வால் நசுடிந்திரம் எண தமக்கென!

ஓர்பாதையை வகுத்துக் கொண்டு மெய்!

அன்பர்தன் நிமித்தமாக சஞ்சாரம் செய்து கொண்டு

இருப்பவன் யவரே? அவனே!

தம் இருப்புத்தன்மையை!

அறிவால் பேரறிவை எட்டிக் கொண்டிருக்கும்

மெய்! அன்பர்களுக்கு மட்டும்!

உணர்வால் உணர்த்த முடியும். ஏனையோர் இதை கற்பனையென

ஒதுங்குவர். அதனை ஒதுக்குவர்.



இதுவரை அசையா நிற்பமென அசைவற்று கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீமஹாத்மா குறுக்கிட்டார்.

ஸ்ரீமஹாத்மா :- நாங்கள் அனைவரும் இதை வைத்தியமாக நம்பியிருந்தோம் பாபாஜி! இதுவரை எந்த மஹாத்மாவும் இப்படி அறிவுபூர்வமான விளக்கம் தந்ததில்லை.

எவரும் படித்ததும் கேட்டதும் இல்லையென்போம். மேலும் எம்முடைய முன்மூன்று விளக்கங்களுக்கு

கட்டிக் / காட்டியதே போதும் பாபா!

வைத்தியம் :- அதன் விளக்கம் இனிதான் வருகிறது தவனமுடன் உணர்வீர். மேலும் பஞ்சவர்ணங்களில் வெண்மை சேர்க்கப்படுகிறது

ஸ்ரீமஹாத்மா :- வெண்மை ஓர் வர்ணமில்லையே பாபா.




பரப்பிரம்மம் 38

தூய
வெண்மை என்பதற்கு
அதற்கு எந்த வர்ணமும் இல்லை.
அதற்கு தூயவெண்மையாய்
ஓர் உதாரணமாகக் கொள்ளலாம்.

அதை எப்படி வர்ணங்களில் சேர்க்க முடியும் யாரால்?

வைத்தியம் :- உண்மைதான் மஹாத்மா! அது
எந்த வர்ணமும் இல்லாத ஒன்றுகும். கவி
கோவ வக்ர குணங்கள் இல்லாமல், ஸத்வ குணம்
ஒன்றே நிரம்பித் ததும்பி, நிர்க்குணத்திற்கு
அட்டெசெல்லும் தூய்மையானதும்;
ஸாந்தி சமாதான பொறுமையின் மணிமையும்!
உணர்த்துவது வெண்மை!
மட்டுமே மஹாத்மா. மேலும்!



39

சாதுக்களின் உள்ளமும்! உடையும்!


தூய வெண்மையே மஹாத்மா. உள்ளம் தூய்மை யானால், அது அறிவாகும். அறிவு தூய்மையானால் அதுவே பேரறிவாகும். ஆகையால் வெண்மையானது பரசொரூப ஸ்திதியை (இருப்பை) ட்டும் உணர்த்து கிறதென்று முதலில் உணர வேண்டும்.

ஆகவேதான் அப்பரசொரூபபிரம்மத்திற்கு!

பால்! போன்ற வெண்மை என உணர்வால் உணர்த.

இது உவமான மேயன்றி. உண்மையல்ல என்றும் உணர்க.

40



வெண்மையை

பற்றிக் கரையேறும் நிலைக்கு இவ்வாறு கூறப்பட்டது.


அனந்த கோடி சூரியனும் அதன் நிலையில், ஓர்
மின்மினிப்பூச்சி போன்றதாகும் என உணர்க.

அனந்த கோடி சூர்யப் பிரகாசம் அது என்றால்?

சூரியனைப் போல் தகிக்க வேண்டுமே என்ற கேள்வி
எழலாம்?

தகித்தால் அங்கு குணம் கவ்விக்கப்படும். ஏழுபடி

அன்பு! பொறுமை! பொறுந்தி! சமாதானம்! பணிவு! கனிவு!



இவைகளின் தன்மை எப்படி குளுமையே

அப்படி பார்த்திட முழு நிலவைப் போல் ” ஆனதாகும்.

பனியைப் போன்று குளிர்ச்சி அஃது என உரைக்க.


அக்குளிர்ச்சியும் ஓர் உபாதையே. ஆனால் அது உபாதையல்ல

என பரசொரூப ஸ்திதியான பர ஒலி மௌனமானது.

அப்பைத்தியம் உட்பட அங்கிருந்தோர்

அனைவரும் அப்பரஸிக்கு!

சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தோம்.





## பரத்தை கண்டுணரும் நிலை.

1 மனத்தகண்களால் காண்பது : **நாமரூப**

ஜக ஜீவ, சொந்தபந்த, பாசப்பற்றுப், காண்பது.

இதனை விளைவது பேதம் / விருப்புவெறுப்பு / குற்றம்குறை

இன்பதுன்பம் என்னும் புண்ணிய பாப வினைக்கணக்கு.

இது ஜனன மரண சுழற்சியில் சுழல்வதாகும்.

இது மனம்சீ வினைச விதியின் பின்னலாகும்.


இதனால் காலதேவனின் பிடியில் சிக்குகிறான் ஜீவன்.





இவன் தனது மன முயற்சியினால்; சமையாக! சர்வார்ப்பணம் செய்ய வேண்டும். அப்படி செய்தால் அறிவு! ஆகிவிடுகிறான்.

உ அறிவுக் கண்ணால் காண்பது :- இங்கு நாமரூப ஜகஜீவ சொந்தபந்த பாசப்பற்றின் இன்பதுன்ப, புண்ணியபாப, வினைவிளைவின் ஆட்டபாட்டமும்! காட்சி நிகழ்ச்சிகளின்! கோவைகள்! குணங்களும் தோற்றுது சர்வ நாசமாகும்.



மா……ஐ……கு!

திட்டமிட்ட நாடகம் திட்டமிட்டபடியும்;
விகிதாச்சாரப்படி பகிர்ந்தளித்த நியதியிலும்;
பாரபட்ச தோஷமில்லா நியதியிலும்;
ஒழுங்காக கர்மகாரியங்களை மாயா!
திறம்பட நடத்துகிறது. (என உரைமுடியும்) அவை நமதும் அல்ல.
நம்முடையதும் அல்ல. என்ற திட உறுதி நிச்சயத்தால்;
உணர்ச்சிவசப்படாமல் எமோஷன் டென்ஷனின்றி





சாட்சி! பாவனையில் எல்லாம் நீயே!

எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே!

இறை! உணர்வோடு பேரறிவை!

எட்டிய நிலையில் இருப்பதாகும்.

③ பேரறிவு கண்ணால் உணர்வது:- அவ்

விரண்டிலும் காணும் காட்சி உன்னை என உணர்க. நிகழ்ச்சி

இந்த காட்சிகள் இல்லை உணர்வது!

ஒன்றே உண்டு இப்பேரறிவை சர்வசாட்சியனைச் சொல்வர்.

இங்கு மனித இனம் உட்பட 84 லட்சம் ஜீவகோடிகளின்



46

தூய சரீராதிகளும்! தாவர வர்க்கங்களும்;

புதுமைகளாக! சிற்ப சித்திரங்களாக

தோற்றினவும்; கொடுக்கல் வாங்கலாக

காணும் அனைத்து நாமரூபங்களாக தோற்றினவும்;

# எல்லாம் மண்ணையன்றே!

# மண்ணெல்லாம்! என்ற

# அறிவின்! ஸ்திரபாவனையே சர்வசாட்சியாகிய



உ



பேரறிவாய் | கண்டுணரும்நிலை ஆகும்.

முடிவு.

மனக் கண்களால் காணும்படித்து, டென்ஷன் ஏமோஷன் என்ற சலன உணர்ச்சிகளுக்கு இடம் கொடாமலும், அறிவுக்கண்ணால் காணும்படித்து சந்தேகம் / களங்கம் / கலக்க பயமில்லாமல்; ரொம்ப ரொம்ப நிதானம் / அமைதி / சாந்தியுடன் / தூய்மனதை கொடுத்து, அறிவின் பாவனையில் நிறுத்தி நிற்றலும், சிலையைப்போலும் பட்டமரம் போலும் அசைவற்றிருந்தலும், இவை இரண்டின் நிலையில் காணும் / எல்லாம் மண் | மயமே என்றும், அவை பரமாணுக்களாகிய பிரமாத்மாவே என்றும் அவை எல்லாம் காலாதீத பரப் பிரம்மமே என்றும் அடிமண்டிபோல் அசைவற்று ஆனந்தமாக இருப்பதே சாதனையின் ரகசியமாகும்.



அறிவின் நிலையில்
பொறுமை & பொறு
மவாட்டமாக
காண வேண்டும்.
பேரறிவு நிலையில் எல்லாம்
மண் மயமே. எல்லாம் மண்ணே
என உணர வேண்டும்.

48

அதை தாங்கள் கண்டதுண்டா? உணர்ந்ததுண்டா??
என ஓர் கேள்வி வந்தது???
பதில் :- காண்பது என்பது இருமை! இருந்தால்
மட்டுமே காண முடியும். இருமை இல்லாமையால்
காண்பானும்! காட்சியும்! இல்லையென்பதே
சத்தியம்.
யாம் யாமாகவே இருக்கிறோம் என்ற ஓர்
இருப்பை மட்டும் உடையோமாதலால் யாம்
இருப்பதால் எம்மை யாம் உணர முடியும்.
அவ்வுணர்வும் எம்மட்டில் உண்டு. நீயும்!
எவரும்! எதுவும்! எமக்கயலாய் இல்லாமையால்



தேன் :- பிரம்மம். (49)
ஒரே சுவை.
பால் பிரம்மம் ஆகும்.
நாமரூபம் என்ற ஐவத்தை
தம்முள் அடக்கிக் கொண்டது
போல் உவமானமாக கொள்ளலாம்.

எம் இருப்பை எவரிடம் கூறுவோம்?

ஆனால் எம் இருப்பை யாம் மட்டும் உணரமுடியும்.

ஆனால் உணர்த்த முடியாது. அதுவும் பாட விளக்க


நிமித்தமாக கூறும் ஓர் உபசார வசனமே. உண்மையல்ல.

இதை கவனிக்கவும்.

நீயும்! யாமும்! (ஓர்) கனியே. நம் இருவர்க்கும்
நடு(வில்) இருப்பது சுவையே. தேனும் பாலும் போல்
சிவம் என்றார் ஆதி ஸ்ரீ சங்கரர்கள். உரை முடிந்தது.
எல்லோரும் மௌனநந்தமாய் நிறைவுற்றனர்.

இருப்பது ஒன்றே.
நடப்பது நலமே.

குரு பாபா.






ஹிமாலயாவிலிருந்து வந்த ஓர் ஸ்ரீ மஹாத்மாவின்
கேள்வி :- அன்பான, அறிவான, பரசொரூபமான
பாபாஜீ ஓர் சிறிய கேள்வி? பஜனை என்றால் என்ன?
அதன் முக்கியத்துவம் என்ன? அது **வெறும்**
**ஒலி** தானே ஜீ? அப்படியானால் இந்த ஒலியின்
அர்த்த & அனர்த்த பாவனையை சற்று விளக்க வேண்டும்??

வைத்தியம் :- இது பயனுள்ள கேள்விதான் மஹாத்மா
சற்று கவனமுடன் உணரவும். **ஒலி** என்பது
ஆரம்பம் பிரணவம் என்ற **ஓம்** காரமாகும் என
அறிக.

அது காலாதீத பரத்தின் நிஜமான மாயையின்
**பரஒலி** ஆகும் என உணர்க. அது
பரஒலியாக இருக்கும் போது அர்த்தமும் அனர்த்தமும் இல்லை.





பர ஒலி என்பது பிரணவ ஓம்காரம் ஆகும். அதுவே வாக்கிய விளக்கம் அது நாம் பெறும் போது, நாம் அது என்றும், ஸ்வய அனுபவம் பெறும் போது யாம் யாமாக இருக்கிறோம் என்றும், வாக்கிய அனுபவம் பெற முடியும் என உணர்க.

அதுவே **இறை** ஒலியாக மாறும் போது, ஸுத்தான அர்த்தபாவனை மட்டும் உண்டாகிறது எனவே உணர்க.

அதை இறைநாமம் என்றும், **பஜனை** என்றும் கூறுவோம். பஜனை என்றால் இறை நாமத்தை சர்வசதா பஜிப்பது ஆகும்.

அதுவே **ஜீவ** ஒலியாக மாறும் போது, **கணநாமரூபம்** பின்னவிருத்தால் அசத்தான அனர்த்தமான ஒலியாக மாறிவிடுகிறது.

பர ஒலிக்கு ஓம்காரத்தை தவிர வேறு விளக்கமில்லை.



முந்தைய காலங்களில் ஸ்ரீ பகவத்கீர்த்தனைகளோ ஸ்ரீ பகவத் நாமஸ்மரணத்திற்கு ஏற்றதாக இருந்தது. இக்காலத்திலோ கரம் தட்டி உரக்கப் பாடும் பஜனையே முதலிடம் பெறுகிறதென அறிவாய் உணர்க. (52)

(1) இறை ஒலிக்கு இறைநாமாவைத்தவிர வேறு விளக்கம் இல்லை.

சர்வ சதா இறை ஒலியை ஒலிப்பதால், அதாவது சப்தமிட்டு பஜனை செய்வதால், அந்த சப்தத்தின் இறைரூபம் சூட்சுமமாக இருந்தாலும் பிரசன்னமாகியே ஒளியாக தீர வேண்டும். இது தெய்வீக விதி ஆகும் என உணர்க.

ஒலிச்சப்தார்த்தத்தின் இத்தெய்வீக ஒளி ஒருவனுக்கு பரவி நிறைவுறும் போது.



காரணம்:- இக்கலி தோஷ வக்ர உக்ரமாக பரவி விட்டதால் அவைகளை நாசம் செய்வதென்றால் கர தோஷமும் தண்ணீரும் நிறைந்து பெருகி வந்தால் அவை சர்வ நாசமாகும் என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

அஞ்ஞானது மன இருள் நாசமாகிறது.

மன இருள் நாசமாகும் போது அவன் பஜிக்கும்

அவன் எந்த நாமாவை உருகி பஜனை செய்கின்றானோ அந்த

ஸ்ரீ பத வாதை காவாதித வரமே காட்சி தரும்.

தந்தே ஆகவேண்டும். இது இறை ஸாதிக்கும் என உணர்க.

இங்கு எந்த தடையும் இல்லை. இதுவே பிரமாண உண்மை.

இறை நாமாவை பஜனை செய்யும் போது மனம் முழுகும் நசித்து அறிவு பிரகாசிப்பதால் சூட்சும ஒளியை ஸ்ரீ பகவானை தரிசிக்க முடியும். இங்கு எந்த தடையும் இல்லை.



பஜனை எனும் ஒலியன்பு.

தெய்வத்தை எதுவென உணரவும், தெய்வத்தை தரிசிக்கவும், தெய்வத்தோடு பேசவும், விளையாடவும் செய்யும் ஓர் மஹாசக்தியாகும். இதுபஜனையில் ஈடுபட்டவர்களுக்குத்தான் உணர முடியும். மற்றவர் அறியார்.

௨ ஜீவ ஒலிஎன்பது:— அநேககாலாதீத பர ஒலியே!

(ஓம்காரபிரணவமே) ஜீவ ஒலியாக பரிணமிக்கிறது.

அப்படி பரிணமிக்கும் போது அவ்ஒலி வடிவடைகிறது.

ஒலி எப்படி வடிவடையும் என கேட்கலாம்???

அவ்வொலி **நாமரூப** / சம்பந்தம் கொண்டு

சூட்சும **குண** / தோஷமாக வடிவெடுக்கிறது.

அதனால் புண்ணியபாபமும் ஜனனமரணமும் பிறக்கிறது என உணர்க. ஆகவே பர ஒலியே இறைஒலியாகவும் இறை ஒலியே ஜீவ ஒலியாகவும் மாறுகிறது என உணர்க.

திரு பாபா.



வாக்கே ஒலிஆகும் 55


ஒலியே வாக்காகும்.
வாக்கே பரத்தை உணர
வைக்கும் ஒலியுமாகும்.
வாக்கே தெய்வத்தை உணர்
த்தியும் தெய்வத்தை தரிசிக்கும்
ஒலியுமாகும்.

## பஜனை பாவனை உட்கருத்து.


கைகளைத் தட்டி! தாளமிட்டு! கத்திக் கதறி!
உருகிப் பாடும்போது பஜனை பாவனை
பண்ணும் போது அந்த இறை ஒலியானது, இறை
ஒலியாக ரூபமாக மாறியே தீரும் இது
மாறியே ஆகவேண்டும் சத்தியம்.

நாமரூப சொந்த, பந்த, பாசப், பற்றோடு, நீ!
சப்தித்தாலும்!
பேசினும்! நாமரூப ஜீவ தோற்றம்!
உன்னை விடாது பற்றிக் கொள்ளும் என உணர்க.
இறைதையது பாவனை ஆகும். பிறதையது கற்பனை ஆகும்.

ஸ்ரீ பாபா.




ஓர் ஸ்ரீ மஹாத்மா! ஹிமாலயாவிலிருந்து
வந்தார். அவருடன் 3 மாணவர்களும் உடன்
வந்தனர். அவர்களெல்லோரும் அத்வைத்தியத்திடம்
பாடம் கேட்பவர்களாகும். அம்மஹாத்மாவோ
தினமும் ஸ்வயநாரானுபவ நாவி பாராயணம் செய்பவர்
களாகும். அங்கு நடைபெறும் ஸத்ஸங்களிலெல்லாம்
அநேக விளக்கம் பெற்றவராகும். இம்முறை
அம்பான் குடிலுக்கு முதன் முறையாக வந்தார்
என்றே சொல்ல வேண்டும். ஹிமாலயா அன்பர்க
ளுக்கே உரிய மூங்கில் பண்ணை அருகே தற்காலிக
மாக போட்டிருக்கும் கல் பதிப்பு தரையில் ஆசனம்
இட்டவண்ணம் அமர்ந்து கொண்டு, அவர்
சொன்னதாவது :- ஹே அம்பாள பாபா ஜீ!
அங்குள்ள அன்பர்களெல்லாம் சொல்வது
ஸத்தியமே. பல ஆயிரம் மைல் பரப்பளவுள்ள
ஹிமாலயாவின் வைப்ரேஷன்! அனைத்தையும்
இந்த ஒண்ணரை ஏக்கர் ஆசியில் தந்த வைத்திருப்பது



57

அதிசயத்திலும் அதிசயமே• ஸ்ரீபகவான் வாசுதேவகிருஷ்ணனும், வேதபுருஷனாகிய வேதவியாசமஹரக்ஷ்மாவும், அமர்ந்து ஒன்றாக இணைந்த நிலையில்; ஆதிநூலாகிய சிவ ரகஸ்யம் என்னும் ஸ்ரீமத்ரிபுகீதையில் ரஸாம்ஸமாக 140 பாடல்களை மட்டும்பொருக்கி எடுத்து, அந் நூலுக்கு, ஸ்ரீமத் ரிபு மஹரக்ஷ்மாவே ஸ்வயஞானனுபவம்! என்று நாமகரணமிட்டு; அதை நித்தியபாராயணம் செய்து, (சிவரகஸ்யத்தால் வந்த வைப்ரேஷனை)




# பரசிவவைப்ரேஷன்!

பரவிப் பிரகாசிக்கிறது என கேள்விப்பட்ட
தை இன்று நேரிலேயே உணர்கிறோம் பாமா.
தரிசித்து ஸ்ரீ
வைத்தியம்:- ஹே பிரபோ! ஹே தயாநிதி! ஹே தயாஸிந்
தாங்கள் இவ்வேழையை தேடி வந்த காரணம்
என்னவோ? அதை மட்டும் சொன்னால் போதும்.
இப்போது தாங்கள் கூறிய அனைத்தும்
தாங்களைப் போன்ற ஸ்ரீ மஹான்கள் போட்ட

பி ..... ..... ச்சை

ஆரும் மஹாத்மா என கூறிய வண்ணம் அவர்
திருவடியை பற்றி கண்ணீரால் அதை சுத்திகரித்து
திருஜடா முடியால் துடைத்து கொண்டிருந்தது அப்
வைத்தியம். அவர் உடனே பரபரப்புடன் கீழே கிடந்த



அமைதியத்தை வாரியெடுத்து முத்தமிட்டு
ஆசிவழங்கிய பண்ணைம்; இதற்கு மேலும்
யாம் நாமதிக்கவில்லை. யாம் வந்த காரணத்தை
மட்டும் சொல்லிவிடுகிறோம் பாபா.
பணிவுக்கும் பணிவான பாபா! பணிவுக்கே
இலக்கணமான பாபா! நாம் அனைவரும்
நித்திய பாராயணம் செய்யும் ஸ்வய
ஞானுபவ நூலில் 65 & 66 !
வது பாடல்களாகிய இரண்டும், எம்முடைய
ஸ்வய அனுபவத்திற்கு ஏற்றதாக இருக்கிறது
பாபாஜீ! அவைகள் மட்டும் சுற்று எம் அறிவுக்கு
ஏற்ற நிலையில் விளக்கி அருள வேண்டும் பாபா???
அனைத்து பாடல்களும் உள் ஒளி பொருந்திய
மாணிக்கங்களாக இருந்தாலும்; எமக்கு இவ் இரண்டே
போதும் பாபா???




## 65 வது பாடல்

நினைக்குயல்போல் தோன்றிய இந்நாமரூபம்;
நிகிலமுமே நீயலது வேறேயன்று.
நமக்குயல் போல் கனவிலுணர் நாமரூபம்;
நாமலது சோதிக்கின் வேறே உண்டோ?
எமக்குயல்போல் காண்பதெல் லாம் யாமே என்றும்;
யாம்தானே ஏகபரப் பிரம்ம மென்றும்;
(உன்) மனக்கவலை யாவையுமே தீரும்மட்டும்;
மறவாமல் எப்போதும் நிதித்தியாசிப்பாய்.

## 66 வது பாடல்

இருக்கின்ற(து) இலங்குகின்ற(து) இன்பமென்றும்;
இயம்பியிடும் நாமமொடு ரூபமென்றும்;
நருக்கமிடும் இவ்வம்ச பஞ்சகத்தில்;
தயங்கிய முன், மூன்றம்சம் பரத்தின் ரூபம்.
சுருக்கமுறும் இரண்டம்சம் ஜகத்தின் ரூபம்.
சொற்பொருளாம் இவ்வம்சம் இரண்டும் தள்ளி;
நெருக்கமுறும் ஸத்திய நித்சுகமாய் மீந்தும்;
நின்றபரம் நாம் எனவே நிதித்தியாசிப்பாய்.

இனிப்பாடல்களின் விளக்கம்.



61

பொருள் :- (A) நினைக்கயல் போல் தோன்றிய இந்த நாமரூபம் :- மனித இனமும்! 84 லட்சம் ஜீவகோடி தனின் இனமும்! மற்றும் தாவர இனமும்! விதவிதமான நாமரூபங்களாக **கண்டால்** / வேறு வேறான **வேற்றுமையாக** / தோற்றும் என உணர்க.


எல்லாம் மண்மயமாக **உணர்ந்தால்** / வேற்றுமை மறைந் ஒன்றாகிய **ஒற்றுமையாக** / மாறும் என உணர்க.

காண்பது **மனம்** / உணர்வது **அறிவு** / ஆகும்.

தனியும் ஓர் நாமரூபமாக / காணும் ல் **மண்** மயமாக உணர்ந்தால் எல்லா நாம ரூப பேதமும் சர்வநாசமாகி;

**நாமும்** / மண்ணே. **எல்லாம்** மண்ணே.

என்ற ஒற்றுமை நிலை இயல்பாக பெறலாம் என உணர்க.





(13) நிகழ்வுமே நியவது வேறேயன்று :—

தன்னில் காணும் எல்லாம் மண்மயமே என உரை வேண்டும்.

பேச்சிலும் செய்கையிலும் **நாமரூப** (விகார விவகாரம் இருந்த) லாம் சிவகாரவும்

அக உணர்வில் மட்டும் எல்லாம் மண் என்ற

**உணர்வு** (பேசவும் பிதற்றவும் இங்கே. ஆசையும் மோசமும் அறுதே) இருக்க வேண்டும் என உணர்க.

(14) தமக்கயல் போல் கனவில் உணர் நாமரூபம் :—


நாமமது சோதிக்கின் வேறே உண்டோ???? :—

கனவில் காணும் அனைத்து நாமரூபங்களும்

நம்முள் தோன்றி **நம்முள்ளேயே** (மறைந்து விடுவதால்)

கனவுக்கு ஒப்பான நனவின் நாமரூப ஜகமும் (அயலாத தோற்றம் ஐயம்)

**நாம் நாமே** என உணர்விருக்க வேண்டும்.





D) எமக்கயல் போல் காண்பதெல்லாம் யாமே என்றும்:—
யாம் தானே ஏகபரப்பிரம்மம் என்றும்:—

**நமக்கு** | அன்னியமாய் காணும் நா ம ரூ ப |
ஜகம் | ஜீவ உறவு சுற்றம் நட்பு | பொன் பொருள் | போகம் | அனைத்தும்
மன எண்ணத்தால் தோன்றுகிறது. மனம் மறந்தால் மறைந்துவிடுகிறது.

உ ன க் கு ம ட் டு ம் . ஏ னை யோ ரு க் க ல் ல .

தோற்றம் | இருப்பு | மாற்றம் | மறைவு | இந்த நான்குமே
நாமரூபமாக தோற்றுவதால்; ஜகத்தை இல்லை என உணர்க.

E) உன் மனக் கவலை யாவையுமே தீரும்மட்டும்:—
நிதிந்தியாசியாய்:—
(தொடர்பாக சிந்தித்து)

உலக வாஸனை பழக்க வழக்க தோஷத்தினாலும்;
முற்கவனக் குற்றத்தினாலும்; தற்கவன மின்மையினாலும்;

(64)



இதை தாரை போல்;

தொடர்பாக!

சிந்தித்த சிந்தித்து நாசம்! செய்ய வேண்டும்.

வியாபாரம்! விளம்பரம்! ஆடம்பரம்! ஆகிய தற் பெருமை பிறரும்

ஸத்தியமாகத்தோன்றும் இந்த நாமரூப உலகமானது; அந்த

மனத்தை! இல்லை என்றறிந்து மெய்யுணர்வு வரையில்;

அறிவினால்! எல்லாம் மண்ணே பிரமமே

என்றதிட உணர்வின் ஆனந்தம் பெறும் வரை;

வாய்ப்புலம்பலும்! அதற்கேற்ப செய்கையும்!

நாமரூப குண தோஷமாக தோன்றினாலும்;


பேசலும் பிதற்றலும் இங்கே! ஆசையும் நேசமும் அங்கே!

என்ற உள் உணர்வோடு

நீ! ஜீவன்முக்தனே! இது ஸத்தியம்.

எல்லாம் மண்ணே! மண்ணே எல்லாம்! யாமே எல்லாம்! எல்லாம் யாமே! என்றதிட உணர்வோடு இரு.

(பழக்க வழக்க தோஷத்தை; பழக்க வழக்கத்தால் நாசம் செய்ய வேண்டும்.)



65

66 வது பாடல் விளக்கம்.

(1) இருக்கிறது :- ஏவர்! ஏவன்! ஏவள்! ஆகிய
(ஈசன் ஜீவன் மாயா)

எந்த நாம ரூபமானாலும் / வரும் / இருக்கும் / மாறும் /

பின் மறையும். ஒன்று மற்றொன்றில் நிலை பெயரும் என உணர்க.

இவை நான்கு நிலைகளிலும், ஏதேனும் ஒன்றாக

இருப்பு நிலையில் இருந்துகொண்டு இருக்கிறது

என்ற ஞானத்தில் மட்டும் இருக்கும் / ஒன்றாகும்.


(2) இயங்குகிறது :- அசைகிறது என்றும், அசைக்கிறது என்றும்

இருவகை பொருள்படும்.

(அசைக்கிறது சித். அசைகிறது சித்தம்)

அப்படி அசைப்பதிலும் / அசைவதிலும் / பற்பல

தோன்றும் / பற்பல மறையும் என மட்டும் உணர்க.



முந்தையது **ஸத்** ஆகும். பிந்தையது **ஸித்** ஆகும்.

இது நாம ரூப ஜக ஜீவ **அசைவு!** ".

இதை சிருஷ்டியின் ஆரம்பம் என்றும் சொல்லலாம்.

(3) இன்பம் என்றும்:- இதை **மனோ** நிலையில் இன்பம் என்றும்; **அறிவு!** நிலையால் ஆனந்தம் என்றும் சொல்லலாம்.

இதை முறையாக சொல்வதென்றால், ஸத் ஸித் ஆனந்தம் என உணர்க. மற்றோர் நிலையில்.


அதாவது நாம ரூப மனோ மய கற்பனை நிலையால் இன்பம் என்றும் சொல்வர்.

நாமரூப கற்பனை நாசமான அறிவின் பாவனை நிலையில் ஆனந்தம் என்றும் பரிமாணங்கள் மாயாவாக அறிகிறோம்.

இன்பம் மனோ நிலையாகும் நவம் சுகம்! அறிவின் ஸ்வரூபம் ஆகும்.

ஆனந்தம் அறிவின் பாவனையாகும் என உணர்க.

(ஸ்திரம்:- ஆரம்பம். பாவனை:- அதீத முடிவு.)





இன்பம் :- நாமரூப இனிமையால் மயங்கிய மனமானது இன்பத்தை துன்பமாகவும், நன்மையை தீமையாகவும், சுகத்தை துக்கமாகவும் இருமையாக செய்கிறது. அப்படியானால் மனம் என சொல்லும்போது கூறப்படும் இரண்டுபட்ட தன்மை என்றும், ஒன்றுபடாது என்றும் ஸத்தியமாக உணரவேண்டும். ஆகவே முந்தையதை துவைதம் என்றும், பிந்தையதை அத்வைதம் என்றும் உணர்க.

இந்த இன்பம் எப்படி உண்டாகிறது என்றால்; நாமரூப மயக்கத்தினாலும், நான் எனதின் கவக்கத்தினாலும் உண்டாகிறது என உணர்க. (ஆவரணமயக்கம் - விட்சேப கலக்கம்) ஆகவே இவ்விரு மனநிலையை விட்டு, அறிவான பாவனையை மட்டும் ஏற்றுக்கொள்க.

ஸத் இருப்புத் தன்மையோடு கூடி செயலற்ற ஒன்றாகும்.

ஸித் இயக்கமற்றது. ஆனால் இயக்கத்திற்குரியதாகும்.

ஆனந்தம் சாட்சியின் அறிவுநிலையால் ஆனந்தமாகும்.



68

தருக்கமிடும்:—
ஸப் தித்து
வாக்கும் சொல்லும் போதும்
என்றும் தர்க்கம் செய்து வாதம்
செய்யும்போதும் என்றும்;
வாக்கும் தருமத்தையும் என்றும் சொல்வாம்
நாமரூபமே வாதத்திற்கு ஆதாரமும் ஐவைகாரிகம்

சித்தம்:— ஸித்தின் ஒருவடிவமாகும். செயலுக்கு அதிகாரியாகும். இதை மனம் என்றும் சொல்லலாம். புத்தி என்றும் சொல்லலாம்.

இருக்கின்றது, இலங்குகிறது, இன்பமானது, என்ற மூன்றான் பர அம்ச சொரூபத்தின் விளக்கமாகும். அடுத்து இயம்பியவை நாம ரூபமென்றும்; தருக்கமிடும் இவ்வம்ச பஞ்சகத்தில்:—

பொருள்:— முன் கூறிய மூன்றும் வாக்காலும் வாயாலும் விளக்கத் தேவையில்லை என்றுணர்க. அவைகள் கண்டவுடன் உணர்வால் உணரக்கூடியவை.

ஆ.......... ஹா.......... ஹா???



(69)

வாக்கிய விளக்கமாக
வும் | சுருக்கமாகவும்!
சொல்லும், நாமரூபம் இரண்டும்
சொல்லும் பொருளுமாக
அவை இரண்டும் மறைமுக கருவியை
என்றும் உணர்ந்தால் போதும்.

என்றும்; நிலையில்லாமல் அழிவன
அவை இரண்டும் வந்து இருந்து மாறி மறையக் கூடியது என
உணர்ந்தால் போதும்.

# நாமம் (பெயர்) ரூபம் (உருவம்)

ஆகிய இரண்டும்; வரியாலும் | வாக்காலும்!

விளக்கித் தெரியக் கூடியவையாகும் என உணர்க.

ரூபத்திற்கு பெயர் கொடுப்பது நாமமாகும்.

நாமம் துவங்காமல் ரூபம் விளங்காது என அறிக.

ரூபம் **மண்** | என உரைப்பட்டுவிட்டால்; அங்கு

நாமத்திற்கு வேலை இல்லாமல் போய்விடும் என அறிக.

நாமத்தால் எது விளங்கப்படும்? எது விளங்கப்படும்??

ஆகவே ரூபத்தை **மண்** / (பரம்) என உணர்ந்து விட்டால்

அதைச் சார்ந்த நாமமும் " " என ஒன்றாகிவிடும்.

என உணர்வால் உணர்க.



மஹாஸ்திரமான 10

# ஸத்ஸித் ஆனந்தம்

ஆகிய நாமம் ரூபமும்

காலாதீத பர சொரூப அம்சமாக திகழ்கிறது எனவுணர்க.

இதைத்தான் தயங்கிய முன் மூன்றம்சம் பரத்தின் ரூபம்!

என்றும்; சுருக்கமுறும் இரண்டம்சம் ஜகத்தின் ரூபம்

ரத்தின சுருக்கமாக சொன்னார் எம்பிரமானந்தமா.

பின்சொன்ன அதீத கருத்து என்னவென்றால்?

சொற் பொருளும் இவ்வம்சம் இரண்டும் தன்னி

அதாவது சொல்லால்தான் ரூபப் பொருள்

விளங்கப்பட்டு துவங்கப்படுகிற தென்றும்; சொல்

இல்லையானால் ரூபம் விளங்காது அதுவல்லாது எதுவும்;

அறிவால் நிதானமாக உணர வேண்டுமென அறிக.

ஆகவேதான் சொல்லையும் (சொல்லால் விளங்கும்) பொருளையும் தன்னிலேதான்


கடைசியான இரண்டடிகளின் கருத்தை உரைப்பியம்.

கடைசி இரண்டடி.

நெருக்கமுறும் ஸத்தியஸித் சுகமாய் மீந்தும்;

நின்ற பரம் நாமம் எனவே நிச்சித்தியாசிப்பாய். என்றார்.

## கண்டுணர்வது



7

ஸத் :- இருப்பு நிலையாகும்.

ஸித் :- அசைக்கும் ,,

(ஸித்தம் :- அசையும் ,,)

ஆனந்தம் :- அனுபவ ,,

நெருக்கமுறும் :— ஊசிநாட்ட இடமில்லாநிலையில்;

**நீக்கமறநிறைந்ததில்** எனப்பொருள்.

அதாவது இடைவெளி இல்லாமல் நெருங்கியுரவியது ,,

,, இருப்பின் **ஸத்** தானது; இயக்க **ஸித்** ஆகி, ஸித்தின் **ஆனந்த** மயமானதுமெனமட்டும் உணர்க.

அந்நிலையில் அனுபவிக்கும் கூட்டுவாயாக. அதாவது

ஸத் ஸித் ஆனந்தமயமாக இருக்க வேண்டுமேயன்றி; ஸத் ஸித் இன்பமயமாக வேண்டாம் என உணர்க.

ஸத்ஸித் ஆனந்தமேயன்றி; ஸத் ஸித் இன்பமும் {நலமுமல்ல / சுகமுமல்ல} என உணர்வால் உணர்க.

ஸ்ரீமஹாத்மா:— ஆகா! ஆகா! வெகு அற்புதம்! வெகுவெகு அற்புதம் என ஆனந்தமயமானவாரே அந்தர்தியானமானார்.

பாபா.

எல்லாம் நீ!

அன்பின் குடில்